தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 126/ந/2024

நாள்.19.03.2025

திரு.N.ஜெகந்நாதன்,
செம்மங்குடி, சீர்காழி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி – எதிர்மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், சீழ்காழி வட்டம், செம்மங்குடி, கோஆப்பரேடிவ் நகர் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.ஜெகந்நாதன் என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.07.2023 அன்று பெறப்பட்டு, 126/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மயிலாடுதுறை மாவட்டம், சீழ்காழி வட்டம், செம்மங்குடி, கோஆப்பரேடிவ் நகர் என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.ஜெகந்நாதன் த/பெ.நாகப்பன் என்பவர் தனது நாளிடப்படாத புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி பணியிட மாறுதலில் மயிலாடுதுறை நகராட்சிஅலுவலகத்தில் 06.12.2019 முதல் பணியாற்றியுள்ளேன். அதன் பின்னர் தற்போது பணியிடை மாற்றத்தில் 29.06.2023 முதல் குமாரபாளையம் நகராட்சில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். எனக்கு கீழ்க்குறிப்பிட்ட காலங்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை.

| | |
|---|---|
| March,2019 | 18/03/2019 to 24/04/2019 (38 days) medical leave. |
| May, 2019 | 01/05/2019 to 13/05/2019 Duty period. |
| | 14/05/2019 to 26/05/2019 13 days medical leave. |
| | 27/05/2019 to 31/05/2019 Duty period |
| | 01/06/2019 to 12/06/2019 Duty period. |
| | 13/06/2019 to 05/11/2019 Medical leave. |

எனது விடுப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்படவும் இல்லை. எனவே மேற்கண்ட காலங்களுக்கு விடுப்பு மற்றும் பணிக்கால ஊதியம் கேட்டு செப்டம்பர், 2021ல் விண்ணப்பம் செய்துள்ளேன். விடுப்பு ஊதியம் வழங்கப்படாததால் மீண்டும் 05.12.2021ல் விண்ணப்பம் செய்தேன். மேற்கண்ட காலங்களுக்கு ஊதியம் கேட்டு நகராட்சிகளின் மண்டல இயக்குநர் தஞ்சாவூர், அவர்களுக்கும் 05.12.2021–ல் விண்ணப்பம் செய்துள்ளேன். அந்த விண்ணப்பம் நகராட்சி ஆணையர் அவர்கள் மூலம் அனுப்பும் பொருட்டு நகராட்சி ஆணையர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளேன். அதன் பின்னரும் மேற்கண்ட காலங்களுக்கு விடுப்பு மற்றும் பணிக்கால ஊதியம் வழங்கப்படவில்லை. இதுவரையில் ஊதியம் வழங்கப்படாததற்கு எந்தவித காரணமும் தெரிவிக்கப்படவும் இல்லை. உயர் அலுவலர்களுக்கு விண்ணப்பம் செய்தும் பலனில்லை என்பதால் மாண்பமை நடுவர் அவர்களுக்கு புகார் கொடுக்க வேண்டிய நிலைக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்.

2) ஆனால் மாறாக மயிலாடுதுறை நகராட்சியில் ஒரு சில நாட்களே பணியாற்றிய திரு.பாலசந்தர் என்பவருக்கும் திரு.ராம்குமார் என்பவர் எந்தவித தகவலும் இல்லாமல் ஓராண்டு பணிக்கு வராமல் இருந்த இருவருக்கும் முறையே 290 மற்றும் 294 நாட்களுக்கு ஒரே சமயத்தில் நகராட்சி ஆணையர் அவர்களின் செ.மு.254/2020/சி.1–ன்படி விடுப்பு வழங்கப்பட்டு, விடுப்புக்கால ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. முறையாக மாவட்ட மருத்துவக்குழு சான்று பெறாமலும் ஒருங்கிணைந்த விடுப்புக்காலம் 60 நாட்களுக்கு மிகையானால் மருத்துவக்குழு சான்று பெறவேண்டும் என்று விதிகளில் இருக்கும்போது, அதற்கு மாறாக 59 நாட்களுக்கு மருத்துவ சான்று பின்னர் பெற்று அதனை ஏற்றுக்கொண்டு 2019ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரையில் எடுக்கப்பட்ட விடுப்பு காலங்களை 2020ம் ஆண்டில் விதிகளுக்கு முரண்பாடாக விடுப்பு ஒப்பளிப்பு செய்து ஊதியமும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எனக்கு மட்டும் விடுப்பு வழங்கப்படாமல் ஊதியமும் வழங்கப்படவில்லை.

3) மேலும் 2019ம் ஆண்டுக்கு பின்னர் எனக்கு தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படவில்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்திருந்ததால் எனக்கு ஊதிய உயர்வு வழங்க இயலாது என்று மறுக்கப்பட்டது. எனது மேல்முறையீட்டுக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செ.மு.21392/2021/கே.2/, 11.08.2022ன்படி ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை நிறுத்தம் செய்யப்பட்டு, கண்டனம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பின்னரும் இதுவரையில் எனக்கு ஊதிய உயர்வு மற்றும் நிலுவை ஊதிய உயர்வு தொகையும் வழங்கப்படவில்லை. எனக்கு கீழ்க்குறிப்பிட்டவாறு ஊதிய உயர்வு வழங்கக்கேட்டு 30.11.2022ல் விண்ணப்பம் செய்தும் இதுவரை ஊதிய உயர்வுகள் வழங்கப்படவில்லை.

| விபரம் | ஏற்கனவே பெறும் ஊதியம் | தற்போது நிர்ணயம் செய்தவாறு |
|---|---|---|
| 01.07.2014–ல் பெற்ற ஊதியம் | ரூ.9170+2400 = 11570<br>(5200–20200 த.ஊ.2400) | ரூ.9170+2400 = 11570<br>(5200–20200 த.ஊ.2400) |
| அடுத்த ஊதிய உயர்வு நாள் | | 01.07.2015 |
| 03.11.2014 முதல் 09.07.2015 வரையில் ஊதியமில்லா விடுப்பு | | 08 மாதம் 07 நாட்கள் |
| ஊதிய உயர்வு வழங்கப்படும் நாள் 08.03.2016 | ஏற்கனவே வழங்கவில்லை | 08.03.2016 ஒரு ஆண்டுக்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம். |
| அடுத்த ஊதிய உயர்வு நாள் 01.01.2017 | ஏற்கனவே வழங்கவில்லை | ரூ.11570+350+360 = 12280<br>பணப்பயன் 01.01.2017 முதல் 30.09.2017 வரை |
| அ.ஆ.303 நி.து.நாள்.11.10.2017ன்படி ஊதிய நிர்ணயம் | | |
| 01.01.2016ல் ஊதிய கணக்கீடு | 11570 x 2.57 = 29735/– | 11570 x 2.57 = 29735/– |
| 01.01.2016 ஊதிய நிர்ணயம் | Level.8 Cell.16 Rs.30400/- | Level 8 Cell 16 Rs.30400/- |
| அடுத்த ஊதிய உயர்வு | | 08.03.2016. Increment stopped for one year without cum. effect. |
| 01.01.2017 ஊதிய உயர்வு (08.03.2016 மற்றும் 1.01.2017) | Not sanctioned previously | Rs.30400+900+900 -= 32200/- |
| 01.01.2018 ஊதிய உயர்வு | Not sanctioned previously | Rs.32200+1000 = 33200/- |
| 01/01/2019 ஊதிய உயர்வு | Not sanctioned previously | Rs.33200 + 1000 = 34200/- |
| 01.01.2020 ஊதிய உயர்வு 6 மாதத்திற்கு திரண்ட பயனுடன் உதிய உயர்வு நிறுத்தம் மற்றும் 13.06.2019 முதல் 06.11.2019 வரை ஊதியமில்லா விடுப்பு | Not sanctioned previously | Due 01.01.2020<br>Incr. stop 06<br>Due 01.07.2020<br>LLP 24-10<br>Sanctioned: 25.05.2021<br>Rs.34200 + 1000 = Rs.35200/- |
| 01.04.2022 ஊதிய உயர்வு | Not sanctioned previously | Rs.35200 + 1100 = Rs.36300/- |

4) எனக்கு முன்னர் ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்தம் ஆணையிடப்பட்டிருந்ததால் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. எனக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை தள்ளுபடி செய்யப்பட்டு “கண்டனம்” என்று உத்தரவிடப்பட்டதால், 17.03.2004 நாளிட்ட அரசுக்கடிதம் 50643/பணியாளர் மற்றும் சீர்திருத்தத்துறை–ன்படி கண்டனம் என்பது பதவி உயர்வினை பாதிக்காது என்று தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதால், எனக்கு பதவி உயர்வு கேட்டு நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு 12.02.2021ல் விண்ணப்பம் செய்துள்ளேன். ஆனால் இதுவரை எனது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

<u>கோரும் பரிகாரம்.</u>

(1) பத்தி 1ல் குறிப்பிட்ட காலங்களுக்கு விடுப்பு ஊதியம் மற்றும் பணிக்கால ஊதியத்தை உடனடியாக வழங்கவும்

(2) பத்தி 2ல் குறிப்பிட்டவாறு எனக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கி ஊதிய நிலுவைத்தொகையை உடனடியாக வழங்கவும்

(3) எனக்கு வழங்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்பட்டு 'கண்டனம்' என்று உத்தரவிடப்பட்டுள்ளதால் அரசு தெளிவுரைகளின்படி எனது கோரிக்கையை பரிசீலித்து எனக்கு முதுநிலைப்படி பதவி உயர்வு வழங்கவும் நகராட்சிஆணையர் அவர்களுக்கு உத்திரவு பிறப்பிக்குமாறு மாண்பமை நடுவர் மன்றத்தை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து மயிலாடுதுறை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ 04.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

3. மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் தனது 23.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"திரு.என்.ஜெகந்நாதன், இளநிலை உதவியாளர் மயிலாடுதுறை நகராட்சியிலிருந்து 15.06.2023 பிற்பகல் முதல் விடுவித்து குமாரபாளையம் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டு தற்போது சிதம்பரம் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார். தனியர் கோரியுள்ள காலங்களுக்கு ஊதிய உயர்வுகள் மற்றும் விடுப்புக்கால பணப்பயன் வழங்குவது தொடர்பாக அன்னாரின் பணிப்பதிவேட்டை பார்வையிட்டால் மட்டுமே மேற்கண்ட விபரங்கள் தொடர்பாக பரிசீலனை செய்ய இயலும். எனவே அன்னாரின் பணிப்பதிவேட்டை இந்நகராட்சிக்கு அனுப்பி வைக்க கோரி சிதம்பரம் நகராட்சிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பணிப்பதிவேடு கிடைக்கப்பெற்றதும் தனியருக்கு வழங்கவேண்டிய பணப்பயன்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 13.12.2024 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 29.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 13.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

6. மயிலாடுதுறை நகராட்சி சார்பில் நகராட்சியில் பிரிவு எழுத்தராகப்பணிபுரியும் திரு.வே.கொளஞ்சியப்பன் என்பவர் 13.12.2024 அன்று நேரடியாக இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திரு.என்.ஜெகந்நாதன் இளநிலை உதவியாளர் என்பவர் தனக்கு வழங்க வேண்டிய விடுப்பு கால ஊதியம் மற்றும் பதவி உயர்வு வழங்கிடகோரும் கோரிக்கையில் அவர் மயிலாடுதுறை நகராட்சியில் பணியாற்றும் போது அவருக்கு சேரவேண்டிய விடுப்புகால பணப்பயன்கள் மயிலாடுதுறை நகராட்சியால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சீர்காழி நகராட்சியில் பணிபுரிந்த போது வழங்கப்பட வேண்டி உள்ளது. திரு.ஜெகந்நாதன் தற்போது சிதம்பரம் நகராட்சியில் பணிபுரிவதால் அந்நகராட்சி மூலம் நிலுவையிலுள்ள பணப்பயன்கள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது "என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்பதனால் 13.12.2024 அன்றைய தினம் விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை என தெரிவித்து தனக்கு மற்றொரு விசாரணை தேதியை நிர்ணயம் செய்யுமாறு தனது 23.12.2024 நாளிட்ட கடிதத்தில் இம்முறைமன்ற நடுவத்தை வேணடிக் கேட்டுக்கொண்டுள்ளார். மனுதாரரின் கோரிக்கையினை இம்முறைமன்ற நடுவம் ஏற்று அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக 08.01.2025 அன்று விசாரணை தேதியை நிர்ணயம் செய்து, மனுதாரருக்கு 03.01.2025 நாளிட்ட அழைப்பாணை மூலம் தெரிவிக்கப்பட்டது.

8. மனுதாரர் 08.01.2025 அன்றைய நேரடிவிசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"நான் சீர்காழி நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி, பணியிட மாறுதல் மூலம் மயிலாடுதுறை நகராட்சியில் 06.12.2019 முதல் பணியாற்றி வந்துள்ளேன். அதன் பின்னர் குமாரபாளையம் நகராட்சி, சேலம் மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு தற்போது சிதம்பரம் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன்.

என் மீது சீர்காழி நகராட்சியால் ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்கப்பட்டு, திரண்ட பயனின்றி ஒரு வருட ஊதிய நிறுத்த ஆணையானது சீர்காழி நகராட்சியால் வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து நான் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு மேல் முறையீடு செய்யப்பட்டதில் எனக்கு நகராட்சி இயக்குநரால் 11.08.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை நிறுத்தம் செய்யப்பட்டு, 'கண்டனம்' (Censure) உத்தரவு வழங்கப்பட்டது.

என் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாக எனக்கு சேரவேண்டிய கீழ்க்காணும் பணப்பலன்கள் வழங்கப்படாமல் உள்ளன.

- கீழ்க்காணும் காலத்திற்கு எனக்கு சேர வேண்டிய ஊதியம் வழங்கப்படவில்லை.
  18.03.2019 முதல் 24.04.2019 வரை ( 38 நாட்கள் மருத்துவ விடுப்பு)
  01.05.2019 முதல் 13.05.2019 வரை ( பணிக்காலம்)
  14.05.2019 முதல் 26.05.2019 வரை (13 நாட்கள் மருத்துவ விடுப்பு)
  27.05.2019 முதல் 31.05.2019 வரை ( பணிக்காலம்)

01.06.2019 முதல் 12.06.2019 வரை (பணிக்காலம்)
13.06.2019 முதல் 05.11.2019 வரை (மருத்துவ விடுப்பு)

- சீர்காழி நகராட்சியில் பணிபுரிந்த காலமான 2016ம் ஆண்டு முதல் இந்நாள் வரை எவ்வித ஊதிய நிர்ணயம் செய்யப்படாமலும் மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்படாமலும் உள்ளன.

- மயிலாடுதுறை நகராட்சியில் காவலராக 03.01.1994 முதல் தற்போது வகித்து வரும் வருவாய் உதவியாளர் பதவிகளுக்கான பணி வரன்முறை இந்நாள் வரை செய்யப்படாமல் உள்ளன.

- எனக்கு பின்னால் பணியில் சேர்ந்த இளையவர்களுக்கு பதவி உயர்வு வழங்கி உள்ள நிலையில் எனக்கு எவ்வித பதவி உயர்வும் வழங்கப்படவில்லை.

எனவே மேற்காணும் எனக்கு சேர வேண்டிய பதவி உயர்வு மற்றும் பணப்பயன்களை எனது பொருளாதார நிலை மற்றும் உடல்நிலையை கருத்தில் கொண்டு காலதாமதமின்றி வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

9) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரது வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தன் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாக எனக்கு சேரவேண்டிய பணப்பலன்கள் கீழ்க்காணும் காலத்திற்கு தனக்கு சேர வேண்டிய ஊதியம் வழங்கப்படவில்லை என தனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

18.03.2019 முதல் 24.04.2019 வரை ( 38 நாட்கள் மருத்துவ விடுப்பு)
01.05.2019 முதல் 13.05.2019 வரை ( பணிக்காலம்)
14.05.2019 முதல் 26.05.2019 வரை (13 நாட்கள் மருத்துவ விடுப்பு)
27.05.2019 முதல் 31.05.2019 வரை ( பணிக்காலம்)
01.06.2019 முதல் 12.06.2019 வரை (பணிக்காலம்)
13.06.2019 முதல் 05.11.2019 வரை (மருத்துவ விடுப்பு)

மேலும் சீர்காழி நகராட்சியில் பணிபுரிந்த காலமான 2016ம் ஆண்டு முதல் இந்நாள் வரை எவ்வித ஊதிய நிர்ணயம் செய்யப்படாமலும் மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்படாமலும் உள்ளன எனவும், மயிலாடுதுறை நகராட்சியில் காவலராக 03.01.1994 முதல் தற்போது வகித்து வரும் வருவாய் உதவியாளர் பதவிகளுக்கான பணி வரன்முறை இந்நாள் வரை செய்யப்படாமல் உள்ளன என்றும் தனக்கு பின்னால் பணியில் சேர்ந்த இளையவர்களுக்கு பதவி உயர்வு வழங்கி உள்ள நிலையில் தனக்கு எவ்வித பதவி உயர்வும் வழங்கப்படவில்லை என்றும் மேற்காணும் தனக்கு சேர வேண்டிய பணப்பலன்கள் மற்றும் பதவி உயர்வினை தனது பொருளாதார நிலை மற்றும் உடல்நிலையை கருத்தில் கொண்டு காலதாமதமின்றி வழங்குவதற்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தை வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு.என்.ஜெகந்நாதன் இளநிலை உதவியாளர் என்பவருக்கு வழங்க வேண்டிய விடுப்பு கால ஊதியம் மற்றும் பதவி உயர்வு வழங்கிடகோரும் கோரிக்கையில் அவர் மயிலாடுதுறை நகராட்சியில் பணியாற்றும் போது அவருக்கு சேரவேண்டிய விடுப்புகால பணப்பயன்கள் மயிலாடுதுறை நகராட்சியால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது என்றும் சீர்காழி நகராட்சியில் பணிபுரிந்த போது ஊதிய நிர்ணயம் (ம) வருடாந்திர ஊதிய உயர்வு ஆகியவை வழங்கப்பட வேண்டி உள்ளது எனவும், திரு.ஜெகந்நாதன் தற்போது சிதம்பரம் நகராட்சியில் பணிபுரிவதால் அந்நகராட்சி மூலம் நிலுவையிலுள்ள பணப்பயன்கள் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதை நகராட்சி சார்பில் ஆஜரான பிரிவு எழுத்தரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் மயிலாடுதுறை நகராட்சி சார்பில் ஆஜரான இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மனுதாரரான திரு.ஜெகந்நாதன் என்பவரின் கோரிக்கையினை விரைந்து பரிசீலித்து மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய பணப்பலன்கள்/நிலுவையிருப்பின் அதனை விரைந்து வழங்கிட மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் மற்றும் சீர்காழி நகராட்சி ஆணையர் ஆகியோர்களுக்கு அறிவுரை வழங்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.N.ஜெகந்நாதன்,
த/பெ. திரு.நாகப்பன்,
கோ ஆப்பரேடிவ் நகர்,
செம்மன்குடி,
சீர்காழி–609 104.
மயிலாடுதுறை மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை.
மயிலாடுதுறை மாவட்டம்.

3)நகராட்சி ஆணையர்,
சீர்காழி நகராட்சி,
சீர்காழி.
மயிலாடுதுறை மாவட்டம்.

4)மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,
தஞ்சாவூர்.
தஞ்சாவூர் மாவட்டம்.

5)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

6)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்